சிவமயம்.


அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒருவராகிய

# சிறுத்தொண்ட நாயனர்

## திவ்ய சரித்திரம்.

# திருப்புகழ்ச்சிந்து.

காவடிச்சிந்து வர்னமெட்டு.



சுவாம பலி

S. பொன்னம்பலதாஸ் இயற்றியது.

பெ- ஆறுமுக முதலியாரால்

பதிப்பிக்கப் பட்டது.

1919 [அணா 3.

ரிஜிஸ்டர் காபிரைட்.

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

12 JUL
MADRAS
23:41721
N19

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

# நூதன புத்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம், வா. கிருஷ்ணசாமிகோனர் இயற்றிய

| | |
|---|---|
| ஸ்ரீமகாபாரதம், ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு. 40-சயிட்டுள்ளது | 0 4 0 |
| ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம் | 0 4 0 |
| ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 2 0 |
| இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 2 0 |
| சற்குல சேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிசிந்து வர்னமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் அதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 2 0 |
| ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம் | 0 2 0 |
| அல்லி அர்ஜுனு திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு, இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 2 0 |
| மேற்படி அல்லி அர்ஜுனு இரண்டாம்பாகம் | 0 2 0 |
| கோவிலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்துவர்னமெட்டு இவை டிராமாகம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம் | 0 2 0 |
| மேற்படி இரண்டாம்பாகம் | 0 2 0 |

## திருசிரபுரம், கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

| | |
|---|---|
| ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான், பாரீஸ், தில்லானு, டோமரி அடங்கியது | 0 5 0 |

கும்பகோணம் புஸ்தகஷாப்பு கே. வி. கதிர்வேல்பிள்ளை இயற்றிய

| | |
|---|---|
| தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 3 0 |
| நந்தனர் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 2 0 |
| சாவித்திரி-சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-பாகம் | 0 2 0 |
| மேற்படி சாவித்திரி-சத்தியவான் 2-ம் பாகம் | 0 2 0 |
| மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 3 0 |
| வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து | 0 2 0 |
| காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 3 0 |
| பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு | 0 2 0 |
| இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை | 0 1 0 |
| ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு இதிலுள்ள கீர்த்தனைகள் வெகு குதூகல முண்டாகும் | 0 3 0 |
| மாம்பழக்கும்மி | 0 1 0 |

உ

சிவமயம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய

# சிறுத்தொண்ட நாயனார்

## திவ்ய சரித்திரம்.

# திருப்புகழ்ச்சிந்து.

12 JUL 1919
MADRAS.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இவை

சுவாமிமலை S. பொன்னம்பலதாஸ் அவர்களால்

இயற்றியது.

ஷெயூர் தமிழ்பண்டிட்

குழந்தைவேல்பிள்ளை அவர்களால்

பரிசோதித்து.

சுவாமிமலை புக்ஷாப்

சோமசுந்திரம்பிள்ளை

விருப்பத்தின்படி

பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை:

முராஹரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

1919.

2383
149241
சென்னை-600 008.
SREE AUTHILETCHUMI VILASAM BOOK DEPOT
Q23 14170c
M/9

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனுல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், சிறுத்தொண்டநாயனுர் திவ்யசரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து என்னும் புத்தகத்தை சுவாமிமலை S பொன்னம்பலதாஸ் அவர்களால் எழுதினதை பெரம்பூர்-ஆறுமுகமுதலியாராகிய எனக்கு சகல சுதந்திரம் கொடுத்துவிட்டபடியால் இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம் பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காப்பீரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

பெ-ஆறுமுக முதலியார்.

உ

சிவமயம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய

# சிறுத்தொண்ட நாயனார்

## திவ்ய சரித்திரம்.

# திருப்புகழ்ச்சிந்து.

## காவடிச்சிந்து வர்னமெட்டு.

12 JUL 1919

---

திருச்செங்காட்டு

வேண்டுவிநாயகர் துதி.

விருத்தம்.

அறநெறிவழுவாநின்ற அறுபத்துமூவன்மாரோ
டொருவனும்சிறுத்தொண்டன் பூவுலகில்செங்காடுதித்தச்
சரிதையைச்சிறந்திடுஞ் செந்தமிழ்நடைச்சிந்துபாட
விரிபுகழுடையோய்வேண்டு விநாயகனின்றுள்போற்றி.

---

### திருச்செங்காட்டு நகர்வளம்.

வெள்ளிமலை என்ற மெட்டு.

வானவர்புகழ்திருச்செங்காடு நகர்
வளமுழுதரிந்துமேகொண்டாடு கலை
வாணியால்சிறந்தகவி மாணவர்களேமுழுதும்
வாசம் புகழ் தேசம்

தேனருவி தான்கமழுஞ்சோலை யதில்
தென்னலதுவீசுந்தினகாலை யிலும்
சிட்டினங்குயில்குருவி மட்டடங்காதுதொனிக்குந்
தீரம் சவிஸ்தாரம்

வீதிமுழு தோரணநன் மாடம் எழில்
விளங்கிடு விச்சித்திரபொற் கூடம் அதில்
வேதியர் முழங்கிடும்நற் கீதமே பொழியுஞ்சாம
வேதம் பகர்நாதம்

ஜாதிமதச் சைவரொரு பக்கம் நால்வர்
சாற்றிடு பண்பாசுர முழக்கம் அரன்
றுளினைகொண் டாடுதுதி வானுலக மார்செவி
தாக்கும் படி கேட்கும்

செங்கழுநீர் பூமணக்கும் ஓடை யோரம்
சென்னல்தழைத் தோங்குகமழ் வாடை வீசி
சீர்புகழுற் சாகமதாய் பார்முழுதுந் தோற்றுந்திருச்
செங்கா டுயர் பாங்காய்

பொங்குமருள் பன்னிருகை வேலன் வளர்
பூமகிழ்பொன் னேரகம்வாழ்பாலன் துதி
போற்றிடும் பொன்னம்பலதாஸ் சாற்றிடுங் கவிஜெகத்தோர்
பூரிப் புடன் பாரீர்

---

## திருச்செங்காட்டு ருத்ராபதீஸ்வரன் றுதி.

அம்மா மதுரைமீனாக்ஷி மெட்டு.

| | | |
|---|---|---|
| திருச் | செங்காடமர்ந்திலகும் | யீசா-திவ்ய |
| | க்ஷேத்ரமந்த | காசா-சபேசா |
| | சேவித்தேன்சர் | வேசா |
| | சிவகாமியின் | நேசா |
| சம்போ | கெங்காதர நமசி | வாயா-சாம |
| | கீதமோகப் | ரீயா-சகாயா |

கிருபைக்கண்பா ராயா
கெதியெனைக்கோள் ளாயா

எனை கார்த்துரக்ஷிப்பதுன் பாரம்-நான்
காமிகள்சஞ் சாரம்-சொற்சோரம்
காதல்கொள்வி காரம்
கருதாதருள் தீரம்

கண் பார்த்துப்பரிந்துளம் நாட்டு-பொன்
னம்பலஞ்சொல் பாட்டு-நீகேட்டு
பதமளித்து காட்டு
பாலித்தருள் தீட்டு

---

## திருவேரக முருகன் றுதி.

பாசுபதம் மெட்டு.

1. பாதிமதியேபுனைந்த பரமனின்பாலா அருள்
புரிவடிவேலா
படையவுணர்க ளிடர்பெருக்கவேல்
கெடவிடுத்தோனே

2. ஏதுயென்குறைதவிர்க்க நேரமில்லையா செவிக்
கேரவில்லையா
யிதமொடுதுதி நினைப்புதித்திட
நிதமருள்தாராய்

3. தேனுந்தினைமாவுக்கன்று தேகியென்றோனே மர
மாகி நின்றேனே
தினந்தினமுறை புரிந்திடுவதை
க்ஷணந் தவிர்ப்பீரே

4. வானவர்களேற்றிடும் பொன்னேரகநாதா உன்
னீதபொற்பாதா நல்ல
வரம்அருட்பொன் னம்பலதாஸ்
காங்குவித்தேனே

## காடவர்கோன் ராஜனிடத்திலிருந்து பரஞ்சோதி யென்ற சிறுத்தொண்டநாயனார் பலதிரவியம் பெற்று சேனாதிபதித்வம் நீங்கியது.

நாரதர்சொன்ன காரணப்படி என்றமெட்டு தர்க்கம்.

ராசன்.

சாமியென்பிழை    தான்பொருத்திட
தாளடிடணிந்தேனே    நிதி
வாழுமைச்சரால்தானே    உம்மை
சங்கமர்க்குரியோனே    யென்று
தானறிந்தும்வீ    ணேவல்கொண்டிட
தாளுமாயென்செய்    வேனே

சிறுத்தொண்டன்.

பூமிசையென்னை    போற்றிப்பேசியே
புகழ்ந்திடிலென்னவாகும்    நானே
புல்லரிவேனைப்பாகும்    எந்தன்
உள்ளமேமெத்தநோகும்    படி
பூஜித்தாலும்மைச்    சேவித்தேபிழைப்
போருக்கேபழிப்    பாகும்

ராசன்.

நானமரபெரும்    போரினிற்படை
நாயகமாயுழன்றீர்    யினி
நானேவல்கொள்ளேன்கண்டீர்    நாமம்
நவில்பரஞ்சோதியென்றீர்    யிதோ
நாடுஞ்செல்வங்    கொண்டாடிச்சென்றிடும்
நல்லரத்திற்கு    கந்தீர்

## சிறுத்தொண்டன் அன்னக்கொடி நாட்டல்.

மருவேசெறித்த என்றமெட்டு

1 அடியேன்கருத்து புவிமீதுதித்து
அனுதாபமுற்ற நிதியோர்கள்
அறமேயெடுத்து சிரமேல்வகித்து
அணுவேணும்சற்று வழுவேனே

2. குடியேசெழிக்க சிவயோகிகட்கு
குணமாய்நடக்க பரமேயான்
குறையேதும்விட்டு சலியாதமட்டும்
கொடையேமேலிட்டு அருள்வீரே

3 கெடியேமுழக்க கொடியேபறக்க
விடுவேன்சிறக்க தடமீதே
கிரிமாதவர்க்கும் பரிவாகலெக்கு
அரிவாகவொக்கும் விதமாக

4. மடமேயடுத்து வெகுபேர்புசித்து
மகிழ்வார்பதத்தை நிதமாக
மனையாளும்லுத்து பணிவோமேசற்றும்
வழுவாதறத்தை புரிவோமே

---

## சிறுத்தொண்டர் செங்காட்டில் அமுதுண்ண அடியார்களைத்தேடி வருத்தமுறல்.

வங்காரமார்பிலணி என்றமெட்டு.

1 செங்காடெங்கிலும்அலைந் தோடியேதிரிந்துழன்று
சிங்காரச்சோலையும்நற் சாவடிமடாலயமும்
திவ்யபொற்பாதகம லமுற்றடியாரைச்தேடி காணேனே

2. சங்காதிசங்கமடி யார்களென்மடாலயத்தில்
தங்காதிலங்குதினந் தோறுந்தவராதமுது
ஷட்பாகமோடமைந் தருசுவையோடருந்தி மகிழ்வாரே

3. செங்காதரசிவகிர் பாஙிதியின்சோதனேயோ
யிங்கோரதிதியுங்கண் ணேரெதிர்படுதில்லேயே
செண்யமுடனறம் வழுவாதென்றெண்ணினபல் னிதுதானே

4. நெங்காதினியுச்சிக் கதிரவன்கடுந்தணலாய்
என்காலமோவாதிக்க யீஸ்வரசம்மதமோதான்
நெஞ்சம்புண்ணுகநெடுந் தூரம்விரைந்தேதிரும்பி மீள்வேனே

5. கண்காணுதூரம்வரை கூறியேகதறிடினும்
யெங்கும்அருந்தலா யெதிர்ப்படு தேழையென்செய்வேன்
கன்மாமனக்கொடுமா பாவியிலும்பாவியோநானறியேனே

6 வெண்காட்டுநெங்கையென் பத்தினியாளிதையறிந்தால்
உண்காதுயிர்விடுவாள் ஓகோபரமசிவமே
மின்னுள்கைபாகமுதுக் கின்னுள்வீண்போகாவண்ணம்
அருள்வீரே

---

## பரமசிவம் வைரவர்வேடம்பூண்டு கைலேயைவிட்டு நீங்கி சிறுத்தொண்டனே சோதிக்க செங்காட்டில் பிரவேசித்தல்.

கண்ணுயிரம்படைத்த என்றமெட்டு.

1. சொல்லால்புகழ்சிறக்கும் எல்லாவுயிர்களுக்கும்
வல்லவநல்லவனென்றற சாலியாய்க்கண்டேனே-சிறுத்
தொண்டனேயித்ததி சோதிக்கவேமனங்கொண்டேனே

2, வில்லாலடித்தர்ச்சுனர்க் குள்ளம்மகிழ்ந்தக்ஷண
மீதினில்பாசுப தாஸ்திரமே யளித்தில்லேயா-யிந்த
மேதினியிற்சிறு தொண்டனே கார்க்கவுந் தொல்லேயா

3. பொய்யாதவனறம் அழியாதிருக்கும்வண்ணம்
பூவிலவன்புகழ்நீடூழி காலங்கொண் டாடவே-செய்ய
பூரணவைரவவேடமெடுத் திட்டேன்நாடவே

4. செய்யாக்கொடுமைதன்னேச் செய்யத்துணிந்தேயினி
சித்தியளித்தருள் முக்தியுகந்திட வேண்டியே-கண்டோர்
திப்பிரமைகொள ஒப்பிடவேற்றிரு ஆண்டியே

5. ஆராயிருந்தாலென்ன கோரும்அடியார்முன்னே
அனவரதந்தவ ராதுநினைத்தரு ளீய்குவேன்-முடிவில்
அடியினற்பத மளித்தடையிலாது துணையாகுவேன்

6. சீராய்கைலங்கிரி மீறியெழுந்தேபாரில்
செங்காடெனுங்குடி ஓங்கிடுமாநகர்சென்றுமே-யென்றும்
பங்கமிலாசிறுத் தொண்டனைக் காணுவேன்யின்றுமே

## ஸ்ரீ வைரவர் தொண்டர்மனையிற்சென்று வெண்காட்டுநங்கையை வினவுதல். தர்க்கம்.

தாவடந்தந்தென்னை விடடி என்றமெட்டு.

வைரவர்.

மேவிடும் அன்னக்கொடியோனே
மிகவிரும்பி வேண்டியேகாணவிரைந்தேனே புகழ்
மேன்மையாய்சிறுத் தொண்டனென்றிடும்
நாமமேபடைத்தாருளோர் வீட்டில்

வெண்காட்டுநங்கை.

சாமிநமஸ்காரந்தானையா வருவீர்சும்மா
சாற்றிடும்மனை யீதேமெய்யா வெகு
தாபமாயடியார்களைக்காண பூபனும்புறத்தோடியேசென்றார்

வைரவர்.

ஆடவரில்லாதகத்திலே
தனிபுகோமே அறியாதுரைத்தாய்நேரிலே யிப்போ
யாரென்றென்னை நினைத்தாயோபெண்மணே
கூறுமுத்திர தேசவாசியே

வெண்காட்டுநங்கை.

தாவடங் கதிர்போலொக்குமே விபூதிபூச்சில்
தாண்டவ மூர்த்தியோடொக்குமே அருள்
சாலவும்மனம் தாளாரென்பதிக்
கோலமேகண்டால்மீளவேவிடார்

வைரவர்.

தோகையேசென்று வருவேனே தேடியேசிறுத்
தொண்டனேவரச்சொல்வாய்மானே யிதோ
தோற்றிடும்நக ராலயத்திரு
வாத்தியின்னடி யிற்றிருப்பேனே

---

## தொண்டர் அதிதியைக்காணாது தேடி மனைவியிடம் முறையிடல்.

நெஞ்சிரக்கமில்லாபாவி என்றமெட்டு

1. வெண்காட்டுநங்கையென்மானே யிப்போ
வேண்டியதிதியைத்தானே திருச்
செங்காட்டங்குந்தேடிக்காணே னிந்த
தீவினைக்கென்செய்குவேனே

2. இன்னேரம்அடியார்கோடி பேர்கள்
யிருப்பாரனேகமாய்க்கூடி நிற்க
தன்னந்தனியாய்காம்வாடி பர
தவிப்புக்கிடமானேம்தேடி

3. தேடாதிடம்ஒன்றுமில்லை யிந்தத்
தேரோடும்வீதிவிட்டெல்லை தாண்டி
பாடாகுமாமனத்தொல்லை சொல்ல
பார்த்துவந்தும்களிப்பில்லை

4. கண்டுமென்னையொளித்தாரோ யிது
கைலைப்பரமனின்கூரோ சிறுத்
தொண்டனென்றழைக்கும்பேரோ அவ
தூருக்காளாகச்செய்வாரோ

5. பங்கமில்லாக்கொடிகாட்டி அன்னம்
படைப்போமடியாரைக்கூட்டி சிவ
சங்கரனார்விளையாட்டி லிது
தானும்ஒன்றுமோசீமாட்டி

6. கற்புக்கரசிமின்மாதே என்ன
காலமறியோமிப்போதே யின்று
ளிப்புசிப்புக்குமேதீதே யுற்றால்
ஏதேவிதன்னுயிர்மீளாதே

## நங்கையார் வைரவர்வந்த விபரத்தை தொண்டரிடம் தெரிவித்தல்.

அம்மாமதுரைமீனாக்ஷிமெட்டில்

ஈரடிச்சந்தம்.

1. எங்கிலும்புகழுந்திருச்செங்கா
டன்னக்கொடியுடையோனே-என்று
சங்கமர்போலிங்கொருவர்வந்தாரே பூமானே
செங்கையால்கரங்குவித்துநானே
மங்கைதொழுதேனே

2. அன்னவரடியாரமுதுண்ணிடக்
காணாதுமனம்வாடி-எழிற்
பொன்னுலவுமின்னகரைநண்ணியவர்தேடி
இன்னரைநொடிக்குள்விரைந்தோடி
துன்னிடுவார்நாடி

3. என்றுமுன்னியம்பியேமன்றாடி
பரந்தேவருந்திக்கூவி-சாமி
யின்றமர்ந்திடும்மனையில்லென்றுசொல்லத்தேவி
நன்றலவென்றேகையெதிர்மேவி
சென்றாரே மேதாவி

4. உத்தரதேசிநாமித்தமி
தனிப்புகோமேயென்று-எழில்
ஒத்திடும்ஆலயத்திருஆத்தியின்கீழின்று
நத்தியேவீற்றிடச்சென்றாரின்று
உற்றிடுவீர் நன்று

---

## சிறுத்தொண்டர் வைரவமூர்த்தியை தெரிசித்தல்.

இசைந்தபெரும் என்றமெட்டு

1. அணிந்தசெந்திருநீர்புனைதாவடம் அடியேனே கண்டு
அகந்தனில்மகிழ்ந்தடிபணிந்தொழு திடுவேனே

2. மணம்புகழ்குணம்பொருந்திடுஞ்சற்குருநாதா முடி
மதியணிசிவன்எழில்துலங்குமுச்சித பாதா

3 தினர்தினந்தவராதமுதுண்ணிடும் அடியாரே நகர்
தெருவெல்லாந்திரிந்தலேந்தோடிக்காணேன் வருவீரே

4. அனந்தமாதவம்புரிந்தவர்க்கு உன்னருள்தோணும் எனக்
கவதரித்தெதிரமர்ந்திடபின் னெதுவேணும்

5. தணிந்தவென்மனக்குறைதவிர்த்திடபுசிப்பாக வர
தமியேனென்மனக்கெழுந்தருளுவீர் நிதியோக

6. மனந்தனிலுதித்திடுவிதம்நமதமுதாகும் சாமி
வரத்தடைப்படில்அரைக்ஷணத்திலென் உயிர்போகும்

---

## வைரவ மூர்த்திக்கும் சிறுத்தொண்டனுக்கும்

### தர்க்கம்.

பொன்னுலவுபன்னிருகைவேலா என்றமெட்டு.

வைரவர்.

வந்தடிபணிந்தெனையேகோரி உன்னை
வாவெனவருந்துகிறாய்மீறி நானே
ஜீவனுக்கிசைந்தஉபகாரி யென்று
வாய்ச்சம்ப்ரதாய பேச்சுடன்வரு தாக்ஷியன்றிகண்காக்ஷியாய்கொடி
மாநகரில்தோணிடச்செய்நேரில் நீயே
தானேசிறுத்தொண்டனேசொல் பாரில்

சிறுத்தொண்டன்.

பந்தவினைதொந்தமகன்றோட அறம்
பாரிலேவழுவாமிசைநாட சிலர்
கூறிடுமன் னுமமதைகூட கொண்ட
பாதகனடியார்களைபுசிப்பாகிடச் சொலிமகிழ்ந்திட்டவெந்தன்
பாவமோமூண்டுதிப்போதிண்டாட வாரும்
தேவரீர் அடியேனென்பின் னேட

வைரவர்.

வக்கணையாய்ச்சொல்லியழைக்கின்றாய் இசை
வாகமெனக்கேற்ற அமுதுண்டா உந்தன்
பாகமுதெகிட்டாதகற்கண்டா ஆனால்
வகைக்கொருவிதம்சமைத்திடுங்கறிநிகழ்த்திடாயிந்த மகிதலத்தினில்
வாகதாய்ச்சுழன்றிடுதேஜெண்டர் கட்ட
லாகுமோசொல்லுவாய் சிறுத்தொண்டா

---

## சிறுத்தொண்டன் சுவாமியிடம் தயாரித்த பதார்த்தவகை தெரிவித்தல்.

நொண்டிச்சிந்து.

திருவருட்பெருஞ்சோதியே நானே
செப்பிடுவேன்சமைத்திடும் கறிவகையே
விருப்பமுடனேகேளும் வெகு
விமரிசைகுறைவிலா தொருநாளும்
அவரைபுடலைகொண்டு நேர்த்தி
யாகவேசமைத்த செங்கதலித்தண்டு
துவட்டலுக்கிதமாக நல்ல
துவரம்பருப்புஞ் சரசமுள்ள
சேர்த்துடன்கறிசமைத்து வாகாய்
சேம்பங்கிழங்குமோர் குழம்பும்வைத்து
பார்க்காய்பிளந்தரிந்து சரி
பயித்தியம்பருப்புடன் முருங்கைபிஞ்சு
பொரித்தகுழம்புமுண்டு பூவில்
புகழுங்காராக்கருணை தாளிதமொன்று
வருகல்வாழைக்காய்வேறு சாம்பார்
மணக்கும்வெண்டைக்காயுடன் வெகுசீறு
சிறக்கும்பொரிக்கறியே உண்ண
தெகிட்டாகொத்தவரைவாழ வரங்காமே
பரங்கிபூஷணியோடு கூட்டு
பச்சரிசிமாவுளுத்தம் பருப்போடு

தேங்காய்திருகிப்போட்டு சீராய்
தேமதுரஸக்கனி பிழிந்துவிட்டு
பச்சடிகிச்சடியுடனே சேமா
பாயசம்பகர்பேணி லட்டுடனே
இச்சையுறவாகும்விதமே போளிக்
கேற்றதோரப்பளம்வடை தேவாமிர்தமே
இத்தனைக்கறிவகைகளும் மின்னும்
ஶீர்க்குச்சம்பாவரிசி பலவகையும்
சொத்துமுத்துச்சம்பாவரிசி குணமான
குடமல்லிச்சம்பாவுடன் செந்நெலரிசி
சீரகச்சம்பாவரிசியே யெந்தன்
தெருவெல்லாம்கமகம வென்றுமணக்க
பெருக்கமாய்வடித்துகொட்டி பண்பாய்
பின்னையும்புத்துருக்குநெய் பாலூற்றி
பண்புடனேயான்படைக்க யிந்த
பாதகனென்மனையில் [illegible]ரித்திருக்க
[illegible]சிறியுமணன் யிப்போ
உரிமையென்மனையில் புசித்தால்நானே
ஜென்மசாபல்யமடைவேன் யில்லையாகில்
சீராயென்னுயிருன் னடியேவிடுவேன்
உண்மையாயறிவீரே சாமி
உகந்தென்மனைக்கெழுந் தருள்வீரே (திரு)

---

## வைரவர் நிராகரித்தல்.

அண்டப்புரட்டனே போடா என்றமெட்டு.

1. என்னவார்த்தைசொன்னுயோடா எனக்
கேற்றபுசிப்பல்லபோடா பாகம்
பண்ணினதின்வகைகூடா மகா
பாவம்சம்பவிக்கதோடா

2. அவரைபுடலையென்றுயே யிப்போ
ஆகாதாகாதுரைத்தாயே அது

சென்னை-600 008.
149241
149241.
Q23:41771
114

சிவனார்சடையறிவாயே நல்ல
செப்பினாய்காய்கரிநீயே

3. வாகாய்கொத்தவரையென்றாய் மழு
மான்தலங்குங்கரம்கண்டாய் சொன்ன
பாகற்கரிசிறுத்தொண்டா பூணும்
பரமருத்திராக்ஷம்கண்டாய்

4. காராக்கருணைக்கொண்டாலும் ஐயன்
கணுவைக்குரிக்குமென்மேலும் மனம்
ஆராதினியொருக்காலும் சிவன்
அவயமேபெரும்பாலும்

5. பரங்கிபூஷணியென்றோது ராயே
பரமன்வயிரேவொண்ணாது நாம்
உரிமையுன்மனைக்கிப்போது உண்ண
உகந்தெழுந்திடதகாது

---

## சிறுத்தொண்டர் தமக்கிசைந்ததை சொல்லச்சொல்லர்

தொட்டுத்தாலிகட்டியபூமா என்றமெட்டு.

1. வெண்ணீரணிந்தகுருநாதா உண்ண
விளம்பிடுவீர்வகைதோதா உந்தன்
கண்ணுக்கனியதாயுன்னீதா
கரிசமைக்கதோதா சரணமேபொற்பாதா
கழரிடவொண்ணாதா

2. எல்லாமரிந்ததவயோகி யிந்த
யேழைக்கிரங்கிதயவாகி கொஞ்சம்
சொல்லுக்கருள்புரிவீராகில்
துரிதமுடனேகி கரிசமைத்துமேவி
திரும்புவேனித்ரோகி

3. சற்றுகடைக்கண்ணருள்பாரும் யிந்த
தமியேன்வேதனையைதீரும் தமக்
குற்றஉணவெதுவோகோரும்

உறுதிமொழிகூறும் திறமைதனைப்பாரும்
அறிந்தபின்னுவாரும்

---

## அதிதி சொல்.

சொல்லாமொழி சொன்னாடா என்றமெட்டு.

1. இத்தனைவாதுனக்கேனடா நீ
எலாதமொழியாடாதடா நாம்
உத்தரதேசவாசியென்றறியாது
வொண்ணாதமுறைதச்சொன்னயடா

2. வேண்டும்புசிப்பெதுகேட்டிடாய்
விளம்பிடுவேன்மனம்நாட்டிடாய்
ஆண்டுக்கொருமுறையாகாபசு
ஆகுமடாபதில்சாற்றிடாய்

3 மெத்தப்பிரயாசையாகுமே
மேதினியில்பழிப்பாகுமே
உற்றதோரைந்துவயதுள்ளபாலனே
ஓதற்கரிதமுதாகுமே

4. தாய்க்கொருபிள்ளையாய்கேளடா
தான்கொண்டுவந்தபின்பாரடா
சிக்கிரமாகத்துண்டாடிக்கரிசமைத்
தீவிரமேபதில்சொல்லடா

5. தாய்மடியில்பிள்ளைதானுமே
தந்தைவைத்தறுக்கவேணுமே
வாய்க்கிதமாகபக்குவமுறைப்படி
வழுவாதாறுண்பேன்நானுமே

---

## சிறுத்தொண்டர் மீண்டு மனைவியிடம்வந்து சொல்லி துக்கித்தல்.

மஞ்சுநிகர் என்றமெட்டு. தர்க்கம்.

சிறுத்தொண்டன்.

வெண்காட்டுநங்கைமடமானே
விருந்துண்ணவே அருந்தபசி
விளம்பிடும்சேதியென்சொல்வேனே அதி
விரைவினிற்றம தொருகுடிக்கொரு
சிறுவனைப்பொருளதைகொடுத்துநாம்
அந்தோபதைக்க தந்தையறுக்க வேணுமாம் கரிசமைத்திட

வெண்காட்டுநங்கை.

அன்பருக்கன்பராகப்பண்டு
முதியோர்மறை மொழிகூறுவ
தானவன்செயலதோயின்று நாம்
அறமதைச்செய தரணியிற்பொரு
ளதைகொடுக்கினும் சிறுவனைத்தர
ஆலவாய்க்கரும்புபோல்கோரும் புத்ரனைமிக்க
பெற்றோரறுக்க யாருதான்சம்மதிப்பார்கூறும்

சிறுத்தொண்டன்.

இன்னதுசெய்வதென்றறியேன்
மனம்மெழுகா யுருகுதடி
யேதேதுயென்னுவிதரியேன். நம்
மிருவருக்கொரு புதல்வனேதிரு
வருளதைப்பெற லபிதமுற்றவன்
யென்றுயென்மனத்துணிந்தேனே எண்ணினயெண்ணம்
வீண்போகாவண்ணம் இயம்புவாய்மறுமொழிதானே

வெண்காட்டுநங்கை.

சொன்னசொல்மறுத்திடேன்மாது
சொற்சோர்வுபடா திருக்கும்வகை

தோற்றுதில்லைவேறெதும்தோது அன்றி
தொல்லையீதெனச் சொல்லவேமனம்
வல்லையேயினி பள்ளியிற்சென்று
தோளிலேசீராளனை தூக்கி வருவீர்நாதா
யொருமனதா தூயநற்பரமனைநோக்கி

## சிறுத்தொண்டன் பள்ளியிற்சென்று சீராளனை தூக்கிவருதல்.

மலடிவயிற்று என்ற மெட்டு.

1. சிவனடியார்மன மகிழ்பாலா அருந்
தவமிசைசேயென பகர்லோலா வாராய்
திருவமுதுண்ணெழுந்திருசீலா பெற்றசீராளா

2. தினகரனுச்சியில்வரும்வேளை யதில்
அனவரதம்புசிப்பதுபோலே யின்று
சிறுவனுனைக்காணுததினுலே வந்தேன்விரைவாலே

1. நவமணியேசிவன்செயல்பாராய் உந்தன்
பவளிதழ்பால்மணமதுமாரா முனம்
நமன்விடுதூதனுய்நான்நேராய் யுற்றேன்கலிதீராய்

4. நடையறியாசிறுவனைத்தானே பெண்ணே
தடையில்லாதுபள்ளியதில்நானே சென்று
நமதிறையவன்விதிப்படிமானே கொண்டுவரலானேன்

## இருவரும் பிள்ளையைச் சீராட்டி அறுத்துக் கரிசமைத்தல்.

சோமசேகர என்றமெட்டு.

பாவியான்பயின்றெடுத்த பாலாபாலா என்னை
தாவியோர்முத்தந்தாராய்சீராளா சீலா

பூவிலேபுகழ்திருச்செங்காடில்நாடி தர்ம
மேவியேபுரிந்தோமேகொண்டாடிப்பாடி யீசன்
சேவடியடைந்திடயின்றேடே முடிவாக
தீவிரம்படுப்பாயே சண்டாளிமடி (பா)

பவவினை தவிர்க்கயிசைந் தேவந்தோனே யாரும்
நவிலொணுபாவியோநாங்களந்தோவீணே உன்னை
சிவசிவாகமுத்தரிந்தோமின்றேதானே அடா
பரமன் திருவருள்பெறுவாய்மகனே (பா)

அறுத்துபின்கரிசமைத்தேனின்றுயின்று பாகம்
திருத்தமாய்திருத்தினேன்விரைந்துசென்று உண்ண
குரித்தவரையழைத்துமேவருவீரின்று நாதா
மறுத்திடாதடுத்துவருவாரேயின்று (பா)

---

## சிறுத்தொண்டன் பிள்ளைக்கரிசாப்பிட சுவாமியை வருந்தல்.

பூமிமெச்சிடு என்றமெட்டு தர்க்கம்.

சிறுத்தொண்டன்.

சாமித்திருவடியில் தேமித்தொழுதேனருள்
தாருமே தாமும்கோருமே வண்ணம்நேருமே ஜென்ம
சாபல்யமுற்றிட தாபமுற்றெழுந்து
வாருமே கண்ணுற்பாருமே

சாமியார்.

நீமகிழ்ந்தாய்நன்று நாமுகந்துவுண்ண
நேருமா பசியாருமா சொல்விபரமா யென்னை
நேசித்தாயேபூவில் பூசிக்கின்றுயவ
தூருமா மொழிகூருமாய்

சிறுத்தொண்டன்.

சோதிக்காதீரிந்த போதுபோகுதாவி
சோருதே பழிநேருதே தம்மைச் சாருதே யிந்த

த்ரோகியென்மீனயில் ப்ரீதியுற்றவமு
தாருதே நெஞ்சம் மாருதே

சாமியார்.

வாதுகள்சொல்லி ப்ரமாதமாகபிடி
வாதமே செய்தகாதமே வந்தென்பாதமே போற்றி
வாரீர்வாரீரென்று கூறுகின்றாய்வந்தேன்
னீதமே நல்லதோதுமே

## வெண்காட்டுநங்கை அன்னம் படைத்தல்.

தையலே சையோகம் என்றமெட்டு.

பல்லவி.

தெண்டுகமண்டலம் கொண்டவரேன்நின்றாள்
சேவித்தடிபணிந்தேன் சாமி
தேவியன்னம்பகர்ந்தேன்

அநுபல்லவி.

உண்டபின்பேசிறுத் தொண்டரென்பேரு
ஓதுமுலகிலெப் போதும்வழுவாது
உத்தமியென்றபேருமே ஜென்மம்
ஒத்து கடைத்தேருமே

சரணம்.

கண்டதுண்டம்மாறு கொண்டகரிவேரு
காணும்வாரின்பம் பூணுமாரிளமுழங்
கால்கரி யீதானுமே உள்ளன்
பால்வகுத்தேன் நானுமே

செண்டுமலர்க்கரம் ரெண்டும்விச்சித்திரம்
செங்கதலித்துடை யுங்கடைக்கண்காது
தீர்க்கமாகச் சமைத்தேன் உண்ணும்
சேர்த்தொருங்கே படைத்தேன்

சுண்டுவிரல்பாரீ | ரைந்துவிரற்கரி
தொன்றுதொட்டுவிடா | துண்டித்தருஞ்சிரம்
தூரயெரிந்தேன் | வீணே யென்று
ப்ரீதியாயுண்பீர் | தானே

---

## சுவாமி தலைக்கறிகேட்டலும் பிள்ளையில்லாவீட்டில் உண்ணே னென்றும் தர்க்கம்.

எட்டாதகொம்பிலிருக்கின்ற அக்கனியெப்படியான்பரிப்பேன் என்ற மெட்டு.

இராகம் - அடாணு.

சாமியார்.

தொண்டாவுன்மனையில் உண்டிடவென்றுலே
கொண்டா தலைக்கறியே — பரி
சுத்தமனத்துடன் ஒத்துப்புசிப்பே
னுபசரித்தாய் சரியே

சிறுத்தொண்டன்.

கொண்டெரிந்தாய்சிரம் வெண்காட்டுநங்கையி
தென்னவிபத்தறியேன் — உயிர்
கொள்ளைகொடுத்தும் பயனில்லையேதிரு
வுள்ளச்செய லறியேன்

சந்தனநங்கை.

சந்தனநங்கைநான் கொண்டெறிந்ததலை
யின்றேகறிசமைத்தேன் — யினி
தாமதிக்காதமு துண்ணும்அடியாரே
தையல்கரங்குவித்தேன்

சாமியார்.

சந்தோஷமாச்சுது கந்தமுதுண்ணிட
மைந்தனுண்டோசொல்வாய் — பிள்ளை

தானருகேயிருந் தாலேபுசிப்பேனே
நீநினைந்துகொள்வாய்

சிறுத்தொண்டன்.

பிள்ளையிருந்துமில் லாததுக்குச்சரி
நல்லதுண்ணும்பின்பே — சொல்வேன்
பித்துப்பிடித்தது போலேபிதற்றியே
பேசுகிறீர் வம்பே

சாமியார்.

பிள்ளையில்லாப்பெரும் பாவியுன்வீட்டமு
துண்ணிட லாகாது — திரு
வுள்ளத்திற்கிதுவொப் பாதுசெல்வேனேயெங்
காகிலு மிப்போது

சிறுத்தொண்டன்.

சாமியெனக்குற்ற பிள்ளையைத்தானே
யருத்துக்கரி சமைத்தேன் — வுந்தன்
றாள்பணிந்தேன்மனம் தாளேன்றிருவடி
சாக்ஷிவைத்தே யுரைத்தேன்

சாமியார்.

பூமிபுகழ்திருச் செங்காட்டீசன்பாதம்
போற்றியே சீராளா — யென்று
பூஜித்தழைத்தால் புரம்பேகின்றோடி
யவதரிப்பான் கேளாய்

---

## சிறுத்தொண்டர் வீதியில்வந்து சீராளனை கூப்பிடுதல்.

சுந்தரப்யாரி என்றமெட்டு

பல்லவி.

தருணம்தருணம்பாலா — வருந்துகிறேன்சீராளா

அநுபல்லவி.

வருந்துகிறேன்சீராளா — வருந்துகிறேன்சீராளா

சரணம்.

அடியவருண்ணுதே துடிக்கிறார்புவிமீதே
நொடியினில்வழுவாதே கடுகிவாறாயிப்போதே தரு)

திருவதனப்ரகாசா கருதுமன்பர்கள்நேசா
காங்குவித்தேன் யீசா கருணைபுரிவிஸ்வாசா(தரு)

செங்காதிலமர்ந்த பொங்கரவமணிந்த
சங்கரனின்றாளில்வ ணங்கியடிபணிந்தேன்(தரு)

---

## சீராளன்வருதலும் தாய்தந்தையர் மகிழ்தலும் சாமி மறைதலும்.

ஆறுமுகவடிவேலனே என்றமெட்டு.

சிறுத்தொண்டன்.

ஆசைக்குமாரன் சிரித்துக்கொஞ்சிவிளை
யாடித்தெருமீதே வாறான்
அணைத்தவனைமுத்தம் கொடுத்திடாதுமனம்
ஆராதடி மாதே

வெண்காட்டுநங்கை.

பாசபந்தம்தவிர்த் திடேற்றவேவந்த
பாலசிகாமணியே யள்ளிப்
பாடத்துடனுன்னை காணக்கண்பெற்றோமென்
பாக்யம்செய்தோம் யினியே

சிறுத்தொண்டன்.

எங்கள்குலம்தழைக்கவந் தவதரித்
திணையிலாதபாலா நாமும்
யின்றமுதுண்ணும் அடியோரையேதொழு
தேற்றுவோம்சீராளா

வெண்காட்டுநங்கை.

இங்கமுதுண்ணிடவந்த அடியவர்
எங்கோடிசென்றாரோ பெண்ணே
ஏந்திழையேநம்மேல் ஏதுகுற்றம்கண்டு
யேசி யகன்றாரோ

வெண்காட்டுநங்கை.

கைக்கெட்டினபொருள் வாய்க்கெட்டலையென்ற
காரணமா மொழியே — படி
கையிலைப்பரமனின் கிருபாகடாக்ஷக்
கருணைக்கேது வழியே

---

## சிறுத்தொண்டபத்தர் வெண்காட்டுநங்கை சீராளன் சந்தனநங்கை நால்வரும் ரிடபவாகனரூடராய் வந்த பரமசிவனை ஸ்தோத்திரஞ் செய்து முத்திபெறல்.

ஆசிரிய விருத்தம்.

புங்கவர்கள்போற்றுமெய் ஞானப்ரகாசனின்
பொன்னடி போற்றிபோற்றி
பூவிலெப்போதும்நின் ருள்மறந்தோமிலை
பூசிக்க வழிதானிலா
தெங்கள்நால்வர்க்குமுன் பாதாரமேயளித்
தீயேற்றி யருளளிப்பாய்
இணையேதிலாதஅர வாபரணமேற்பூண்ட
யீசனே யென்செய்குவோம்
மங்கைசிவகாமியுந் தானும்விடையதிலேறி
வந்துமகிழ் கின்றகாக்ஷி
மனமாரவேதெரி சித்தருளைபெற்றபின்
வருவினை யகன்றிடாதோ
செங்காட்டில்வாழும் கண்காணுமாபுண்ய
தீக்ஷண்ய விக்ஷண்யனே
சேவடியில்நாளும்வைத் தாளுஜெகதீசனே
சீர்பாதம்போற்றிபோற்றி.

முற்றுப்பெற்றது.

---

ஸ்ரீசுவாமிநாதசுவாமிதுணை.

### கும்பகோணம் - இராமசந்திரன் இயற்றிய

காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம் 0 1 0

பாவியபெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபாகம் அடங்கியது 0 1 0

பூஜா ராமாயணம் 0 1 0

திரியோதனன் மோகம் நாவல்ஸ் 0 4 0

### சுவாமிமலை S. பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

திரு எரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து 0 2 0

இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும்
இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0

### சுவாமிமலை கு. ரு. முத்தையாபிள்ளை இயற்றிய

பொய்சொல்லாபுனிதனெனும் சத்தியஅரிச்சந்திரதிருப்பு-கா-சிந்து 0 3 0

### மதுரை வித்வான் கலியாணசுந்தரம் பிள்ளை இயற்றிய

மன்மதராஜன் சரித்திர லாவணி எரிந்த கக்ஷி 1-க்கு 0 3 0

பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை 0 3 0

எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்தி
ரம் என்னும் சித்திரா புத்திரன் கதை 0 6 0

ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்னமெட்டு
பஜனை ஜாவளிகள், முதல்பாகம் 1-க்கு விலை அணா 0 2 0

தாடகை சம்மாரம் டிராமா 1-ம் பாகம் 0 2 0

சீதாகலியாணம் பரசுராம பங்கம் டிராமா 2-ம் பாகம் 0 2 0

வழிநடை உப்புமாவு பாட்டு 0 1 0

சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் யேசல் 0 2 0

சம்பந்திக்கு சமையல் செய்யும் அப்பளப்பாட்டு 0 1 0

பல ஸ்தலங்களின்பேரில் பாடிய சிவப்புகழ் 0 6 0

குசேலர் சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0

ஞான சவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0

சரசாங்கி ஜாவளி முதற்பாகம் 0 2 0

சூடி கொடுத்த நாச்சியாா என்னும் கோதை கல்யா
ணம், ஆண்டாள் பரிணயக்கும்மி 0 3 0

சிறுத்தொண்டர் நாயினுர் திவ்ய சரித்திர திருப்
புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு அடங்கியது 0 3 0

பாரிஜாத நாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நி
யில் திருட்டுப்போன கும்மியும் 0 3 0

ஆர் நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை
இவர்கள் பாடிவரும் சுதேச கள்ளன் பார்ட்டு 0 2 0

நாடகங்களில் விகடம் சில்லரை வேஷங்களில் சிலது
எல்லாரும் சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும், விதூ
ஷக ஆக்ட்டும் உண்டு. 0 4 0

இவற்றில் பார்ஸி இந்துஸ்தான் பதங்களும் அட
ங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவ
டிச்சிந்து வர்னமெட்டு 0 3 0

ஸ்ரீமகா பாகவதத்தில் துலாபார நாடக கும்மியும் ஸ்ரீரங்க நாச்சியார் வசந்த உற்சவ கும்மியும் 0 8

சொக்குபாய் சரித்திரம் டிராமா 0 8

குசேல சரித்திரம் டிராமா 0 8

பாகவத திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2

மாசிலாமணி உபாத்தியாயர் இயற்றிய சிறுத்தொண்டர் நாடகம் 0 10

சிட்டிசேலைக்கும் நாட்டு சேலைக்கும் சண்டை 0 1

சுப்பிரமணியர் கொத்து என்னும் அட்சரமாலையும், சத்துரு சங்காரமாலையும், சத்துருசங்கார திருப்புகழும், விநாயகர், சுப்பிரமணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளினர்ச்சனைக்குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கியிருக்கிறது. 0 3

லீலிக்கதை 0 4 0 பண்டரி கீர்த்தனை 0 4

ஆறுபாவை ஒக்கபிலேரி 0 4

கூலிக்குத் தாலிகட்டினகதை 0 4

ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 4

காளத்திபுராணம்—வசனம், காளத்திக்ஷேத்திரத்தில் பக்தி முக்தி படைந்தவரின் சரித்திரங்களின் ஐதீக படங்களுடன் உண்டு 0 6

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும் புஸ்தகங்களை விபரம் எழுதினால் உடனே அனுப்பபட்டும்.

இப்படிக்கு,

பெரம்பூர்-ஆறுமுகமுதலியார்.

நெ. 4, பெருமாள் கோவில் தோட்டம் 2-வது சந்து,

சென்னை

149241

ஆவணக்காப்பக நூலகம்

600 008.